தமிழ்ச்சிட்டு

முழுவதும் அறிந்துகொள்!
முடிவு செய் யாதே!

தொழுவது நன்று; எனின்
அடிமையா காதே!

விழுவதும் இயல்பு; உடன்
விசும்பென நின்றுகொள்!

அழுவது கோழைமை!
அயர்வுகொள் ளாதே!

குரல் 2. இசை 11, 12.



தனித்தமிழ் இறுவ
கலை இதழ்
விலை 20 காசு

...'S SARASWATHI ... RECEIVED ... SEP 1968 ... NORE

மயில்

ஒற்றைக் காலைத் தூக்கி ஆடும்
வண்ண மயிலே'—உன்
உடல் முழுதும் கண்கள் ஏனோ?
வண்ண மயிலே!

சுற்றும் முற்றும் பார்ப்ப தேனோ
வண்ண மயிலே!—உன்
சின்னக் கொண்டை ஆட்டு தற்கோ?
வண்ண மயிலே!

தொங்குந் தோகை விரிப்ப தென்னே?
வண்ண மயிலே!—இன்பம்
தோன்று வதைக் காட்டத் தானோ
வண்ண மயிலே!

கங்குல் வான முகிலைக் கண்டு
வண்ண மயிலே!—நீ
காலைத் தூக்கி ஆடு வதேன்?
வண்ண மயிலே!

நெட்டைக் காலும் நீள் கழுத்தும்
வண்ண மயிலே!—நீ
நீட்டி நீட்டி நடந்தால் இன்பம்
வண்ண மயிலே!

முட்டை யிட்டோ குஞ்சு பொரிப்பாய்
வண்ண மயிலே!—உன்
முழவுக் குரலால் அகவல் செய்வாய்
வண்ண மயிலே!

பச்சை நீலம் மஞ்சள் சிவப்பு
வண்ண மயிலே—ஒளி
பளபளக்கும் பட்டுடலாம்
வண்ண மயிலே!

குச்சிகள் போல் நீலக் கொண்டை
வண்ண மயிலே—நீ
குலுக்குகையில் கோடி இன்பம்!
வண்ண மயிலே!

துரை-மாணிக்கம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்2-தி பி. ககூகூகூ (இரட்டை, கடகம்) சூலை, ஆக-68 இசை-11, 12.

தமிழத் தம்பியே! உலகைத் திருத்தடா!

தம்பி! இதுகேள்! தங்கையே, இதுகேள்!
செம்பொன் மணிபோல் சிலஉரை சொல்வேன்!

உருண்டுகொண் டிருக்கும்இவ் வுலக உருண்டையில்
இருண்ட பகுதியும் ஒளிசேர் பகுதியும்
அரைஅரை இல்லையா? அருமைத் தம்பியே!
இருள்ஒளி யாவதும் ஒளிஇருள் ஆவதும்
மாறி மாறி வருஞ்செயல் இல்லையா?
கூறுதற் கரிய, இவ் வானப் பரப்பினுள்
எண்ணுதற் கரிய விண்மீன் கூட்டமும்
நுண்ணொளி வீசிடும் பால்வழித் திரட்சியும்
ஆயிரம் ஆயிரங் கோடி அளவின!

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

நீயும் நானும் நில்லாது எண்ணினும்
மாயும் வரைக்கும் எண்ணி மாளாது!
அத்துணைப் பெரியதிவ் வகன்ற விண்வெளி!
இத்துணைப் பெரிய இவ்விண் வெளியிலே
நுண்ணிய துகள்போல், நுண்ணிய அணுப்போல்
மண்ணுல குருண்டை! மனத்தில்வை தம்பி!
இம்மண் உருண்டையுள் இருக்கின்ற நாமோ
அந்நுண் அணுவினும் அணுவாம் என உணர்!
இத்துணை அணுப்போல் இருந்து கொண்டுதான்
எத்தனைச் செருக்காய் இருக்கின்றோம், தெரியுமா?
நமக்குள அறிவே பெரிதென் கின்றோம்!
நமக்குத் தெரிந்ததே சிறந்ததென் கின்றோம்!
நாம்உரைப் பதையே நல்லுரை என்று
வீம்புரை பேசி வீணரா கின்றோம்!
நம்கண் காண்பதே காட்சி என்றும்
நம்செவி கேட்பதே கேள்வி என்றும்
பித்துரை பேசிப் பிதற்றித் திரிகிறோம்!
செத்துத் தொலையுமுன் செய்ததும் சொன்னதும்
கூட்டிப் பெருக்கிக் கழித்துப் பார்த்தால்
ஈட்டம் என்பதோ இழிவும் பொய்யும்
கள்ளமும் குள்ளமும் கயமையும் அன்றிக்
கொள்ளச் சிறந்தது கோழி முட்டையே!
என்ன, தம்பி! விழிக்கின் றாய், நீ!
சொன்ன யாவும் உண்மையா, இல்லையா?
தம்பி! நம்மிடம் மாந்தத் தன்மை
இம்மி அளவே னும் இருக் கின்றதா?
அண்டையில் உள்ளவன் அயலில் வாழ்பவன்
உண்டானா? குடித்தானா? உடுத்தானா என்று
கவலைப் படுகின் றோமா? இல்லையே!
(கவலை இலானைக் கயவன் என்று
வள்ளுவப் பெருந்தகை வாய்விட்டு உரைத்தார்)
ஒருவரைப் போலவே யாவரும் பிறப்பவர்!
ஒருவரைப் போலவே யாவரும் இறப்பவர்!
இருப்பினும் இந்த மக்களுக் கிடையில்

பெருமைப் படும்படி பேசஒன் றுண்டா?
யாவரும் ஓரினம் எனும்நினை விருந்ததா?
யாவரும் மாந்தரே எனநினைந் தனரா?

ஒருவர் பசித்திட ஒருவர் உண்கிறோம்!
ஒருவர் அம்மணம்! ஒருவர்க்குப் பட்டுடை!

கூரை பிய்ந்த குடிசை ஒருபுறம்!
காரை பூசிய கட்டிடம் ஒருபுறம்!

வீங்கிடும் வெற்றுக் கால்களோர் பக்கம்!
தூங்கிடச் செய்யும் ஊர்திஓர் பக்கம்!

மலக்கூடை ஒருத்தி மண்டையில் சுமப்பாள்!
மலர்க்கடை ஒருத்தி கொண்டையில் சுமப்பாள்!

பாலுக் கேங்கும் பசித்தொரு குழந்தை!
பாலைக் குமட்டிடும் பசியிலா தொன்று!

காயும் வெயிலில் கருகுவான் ஒருவன்;
ஓய்வெனக் குற்றாலம் ஓடுவான் ஒருவன்!

மருந்திலா ஏழ்மையில் இறப்பான் ஒருவன்!
விருந்து செரித்திட மருந்துண்பான் ஒருவன்!

மேல்பிறப் பென்றொரு மடையன் உளறுவான்;
கீழ்ப்பிறப் பென்றே ஒருவனைக் காட்டுவான்!
இன்னும் எத்தனை ஏற்றத் தாழ்வுகள்!
சொன்னால் நம்பவும் மறுப்பாய் தம்பி!
அடடா! தம்பி! ஆரெடுத் துரைப்பார்?

அன்பும் அறிவும் அகன்ற உள்ளமும்
இன்றைய வாழ்வில் யாருக்கு வேண்டும்...?
திருக்குறள் அறிவு செருப்புக் காகுமா?
இருக்கும் நூல்களை எவன்படிக் கின்றான்?
காசு பணங்களே கனவிலும் நனவிலும்
பேச்சிலும் செயலிலும் பெருமைப் படும்பொருள்!
பொன்னும் மண்ணும் என்றும் இருக்கும்!
இன்னும் இன்னும் என்கிற நாம்தாம்
மடிந்து மட்கி மண்ணாய்ப் போவோம்!
விடிந்தது முதலா இருள்வது வரைக்கும்
பணம்பணம் என்றே பேயாய் அலைகிறோம்!

மனத்தை எந்த மடையன் நினைத்தான்?
பொருள் தேவைதான்! பொருளே தேவையா?
இருள்உலகிதனை இடித்துத் தள்ளடா!
எத்துணைப் பெரிய உலகம் என்கிறோம்!
எத்துணைச் சிறியது மக்களின் உள்ளம்!

தம்பி! ஒன்று கேள்:

நாறும் மாந்தக் குலத்தைக் கழுவடா!
ஏறும் உணர்வால் அறிவொளி ஏற்றடா!
குள்ளக் கொள்கையைக் குப்பையில் போடு!
உள்ளச் செழுமைக்கு உரமிட்டு வா, நீ!
தூசு தும்புகள் உடனே துடைத்தெறி!
மாசினை அகற்று; மனத்தைத் தூய்மைசெய்!
காசைப் பெரிதெனக் கருதி விடாதே!
மூசைப் பொன்னும் மண்ணும் ஒன்றே!
வாழ்வு பெரிதிலை; வளமையே பெரிது!
தாழ்வைத் தூள்செய்! தயக்கம் கொளாதே!
கற்ற கல்வியால் கவின்செய் உலகை!
உற்ற இழிவுகள் ஊதித் தள்ளு!
மடமையை வீழ்த்து! மக்களை ஒன்றுசேர்!
கடமையை உணர்த்து! கன்னித் தமிழினால்
கமழக் கமழ உரைசெய்! வினைசெய்!
தமிழத் தம்பியே! தமிழத் தம்பியே!
உலகைத் திருத்தடா, தமிழத் தம்பியே!

—பெருஞ்சித்திரன்.

கழுதை அழுத கதை

ஆசிரியர் வெளியூர்ச் செலவு காரணமாக, இக் கதை கடந்த மாதமும் இந்த மாதமும் வெளியிடப் பெறவில்லை. அடுத்த மாதத்திலிருந்து கட்டாயம் தொடர்ந்து வெளிவரும். அன்பர்கள் பொறுத்தருள்வாராக.

—அமைச்சர்.

படித்துப் பாருங்கள்.

சிறு மீன் எமன்:

கடலில் வாழும் மீன்களில் மிகவும் கொடியது சுருமீன். இது சிறு படகுகளைக் கவிழ்த்து அவற்றிலுள்ள மாந்தர்களையும் விழுங்கி விடும் தன்மையுடையது. இச் சுருமீனுக்கு ஒரே ஓர் அடி நீளமுள்ள சிறிய மீன் ஒன்று எமனாக இருக்கின்றது. இச் சிறிய மீன் பார்வைக்கு முள்ளம்பன்றியைப் போலிருக்கும். சுருமீன் தன்னை நோக்கி வருங்காலத்தில் சிறுமீன் தன் உடலை ஓர் உருண்டையாக உருட்டிக் கொள்கிறது. அதன் உடல் முழுவதிலும் அநேக முட்கள் இருக்கின்றன. இருந்தாலும் இதைச் சுருமீன் விழுங்கி விடுகிறது. சுருமீன் வயிற்றுக்குள் சென்ற இம் முள்ளம்பன்றி போன்ற மீன், உருண்டையாக்கிய தன் உடலை மீண்டும் நேராக்கிச் சுருமீனின் வயிற்றிலிருந்து கொண்டு, அதன் உடலைத் துளைத்து வெளியேறுகிறது. உடல் துளைக்கப்பட்டபடியால் சுருமீன் இறந்து விடுகிறது.

எலிகளின் ஆற்றல்:

அமெரிக்காவில் மலைப்பாங்கான இடங்களில் வாழும் பீவர் என்னும் மலை எலிகள் பெரிய பொறியியல் வல்லுநர்களைப் போல வேலை செய்கின்றன. தண்ணீரைத் தடுத்து அணைகள் கட்டிக்கொள்கின்றன. தரைமட்டத்திற்குப் போகும் எந்தப் போக்குவரத்தையும் பொருட்படுத்தாமல் எங்கு வேண்டுமானாலும் நினைத்த அளவில் காப்பாகச் செல்வதற்குக் குறுக்கும் நெடுக்குமாக நீண்ட அளவில் பாதாளப் பாதையைக்குடைந்து கொள்கின்றன. வழியில் ஊற்றுகளிருந்தால் அணைகட்டித் திருப்பிவிடுகின்றன. மலையின் ஒரு புறத்தில் வாயிலும், மறுபுறத்தில் புறக்கடை வாயிலும் ஏற்படுத்தி நடுவே வெளியே வந்து புகுந்து கொள்வதற்கும் வாயில்கள் அமைத்துக் கொள்கின்றன.

நரிகளின் கற்பு:

ஆண்நரி இறந்து போனால் பெண்நரி மற்றொரு ஆண்நரியை விரும்புவதில்லை. ஆண்நரியும் பெண்நரி இறந்து போனால் மற்றொரு பெண்நரியை விரும்புவதில்லை. எவ்விடத்திலுமே நரிகளின் பண்பு இப்படித்தானாம்.

ஒட்டகச் சிவிங்கி:

ஒட்டகச் சிவிங்கியைப் பார்க்கும்போது அதன் பின்னங் கால்களை விட முன்னங்கால்கள் நீளமானவையாக நமக்குத் தோன்று

கின்றன அல்லவா? ஆனால் உண்மையில் அப்படியல்ல; நமது பார்வை மயக்கம்தான் அது. இருகால்களும் ஒரே நீளமுடையனவே. நீளமான கழுத்தையுடைய ஒட்டகச் சிவிங்கியின் கழுத்தில் வேறு எந்த உயிரினத்தையும் விடக் குறைவான எலும்புகள்தாம் இருக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சிறிய ஊர்க்குருவிக்கு 14 எலும்புகளும், வாத்திற்கு 16 எலும்புகளும், ஓதிமத்திற்கு 23 எலும்புகளும் கழுத்தில் இருக்கின்றன. ஆனால் நீண்ட கழுத்துக்குப் பெயர்போன ஒட்டகச் சிவிங்கியின் கழுத்தில் ஏழே எலும்புகள்தாம் இருக்கின்றன! இதையும் விட வியப்பு ஒட்டகச் சிவிங்கி எவ்வித ஒலியும் எழுப்பாது என்பதுதான்.

முதலைக் கண்ணீர்:

ஒரு முதலை பெரிய விலங்கை அல்லது மாந்தனை விழுங்குவதற்குத் தன் வாயைத் திறக்கும்போது, அதன் கண்களிலிருந்து நீர் வடியும். அஃது அந்த விலங்குக்காக இரக்கப்படுவது போலப் பாசாங்கு பண்ணுவதாக முற்காலத்தில் கருதினார்கள், 'முதலைக் கண்ணீர்' என்ற சொற்றொடர் இதிலிருந்து பிறந்ததுதான். ஆனால் முதலையின் தாடைகளை எக்காரணத்தினாலும் மிக விரிவாகத் திறந்தால் அதன் கண்களிலிருந்து தண்ணீர் வரும் என ஆராய்ச்சியாளர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பாம்புகள்:

பாம்புகள் மணிக்கு ஏறத்தாழ 3 கல் வேகமே ஓடமுடியும். அவை ஒரு பொழுதும் கண்களை மூடுவதில்லையாம்.

–சா. வெற்றிச்செல்வி, தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

- *மாந்தனுக்கு அடுத்தபடி அறிவுள்ளதாக இருப்பது 'தால்பின்' என்ற கடல்வாழ் உயிரி (பிராணி)யே யாகும். இதன் அறிவு வளர்ச்சியையும், அது பேசும் ஒரு வகையான மொழியையும் இப்பொழுது உருசிய அறிவியலறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.*
- *தமிழ்நாட்டில் இப்பொழுது மொத்தம் 12 நடுவண் நூலகங்களும், 1280 கிளை நூலகங்களும், நாளைக்கொருமுறை நூல் வழங்குவதற்கென்று 2650 சிறு நூலகங்களும் உள்ளன.*

குருதி

–த. சலாவுதீன், அறி. இ., ஆ. ப.

நம் வீட்டிற்குப் பால்காரன் நாள்தோறும் நமக்கு வேண்டிய பாலைக் கொணர்ந்து கொடுத்து விட்டுப் போகிறான். பட்டணங்களிலும் பெரிய நகரங்களிலும் பால்காரர்கள் பால் நிறைந்த கண்ணாடிக் குப்பிகளை வீட்டில் கொடுத்துவிட்டுக் காலியானவற்றை வாங்கிக் கொண்டு செல்வர். இதேபோல் நம் உடலிலுள்ள உயிர்மங்களுக்கு (Cells) உணவும் தீயகமும் (Oxygen) கொடுக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது அவை உண்டாக்கும் கழிவுப் பொருள்கள் நீக்கப் படவும் வேண்டும். இவ்வேலையைக் குருதி செய்கின்றது.

இக் குருதியானது மூன்று வகையான குழாய்களின் மூலம் உடலின் எல்லா உயிர்மங்களுக்கும் செல்லுகின்றது. அவற்றைப் பாய் குழல்கள் (Arteries-தமனிகள்) வடிகுழாய்கள் (Veins-சிரைகள்) நுண்புழைக் குருதிக் குழல்கள் (Capillaries-தந்துகிகள்) என்கிறோம். இக் குருதிக்குழல்களுள் குருதியை விரைவாகச் செலுத்தும் வேலையை நெஞ்சாங்குலை செய்கின்றது.

சிவப்பணுக்களையும் வண்ணமற்ற குருதி யணுக்களையும் கொண்ட வெளிறிய மஞ்சள் வண்ணமான பாய்மம் குருதியாகும். மிகச் சிறியதாயும் வட்டமான காசுபோன்றதாயும் மீள் திறன் உடையதாயும் உள்ள பொருள் குருதிச் சிவப்பணுவாகும். இதன் அளவு 1/3200 விரற்கடை. இவற்றின் ஓரம் தடித்து நடுப்பகுதிகுழிந்து இருபுறக்குழி வில்லையைப் போல் இருக்கும். இதற்குள் உள்ளணு இல்லை. ஆனால் உட்பாகம் மிகவும் மென்மையாய் இருக்கும். இதற்குள் இரும்பு கலந்த குருதி நிறமி (Haemoglobin) இருக்கின்றது. இது மிகவும் தேவையான ஒரு பொருளாகும். ஏனென்றால் இஃது உயிர்மங்களுக்குத் தேவையான தீயகத்தைக் கொடுத்து அங்குள்ள கரி–இரு–தீயகத்தை நீக்குகின்றது. இது தீயகத்தைக் கொண்டு செல்லும்போது குருதிக்கு நல்ல சிவப்பு வண்ணத்தைக் கொடுக்கின்றது. மாறாக கரி-இரு-தீயகம் இருந்தால் குருதி கருஞ்சிவப்பு வண்ணமுடையதாய் இருக்கும்.

வண்ணமற்ற குருதியணுக்கள் குருதிச் சிவப்பணுக்களைவிட அளவில் பெரியனவாகவும் உள்ளணுக்களை (உட்கரு)க் கொண்டவையாகவும் இருக்கும். இவை தங்கள் உருவத்தை மாற்றிக்கொள்ளும் திறன்

படைத்தவை. இவற்றை வெள்ளைக் குருதியணுக்கள் என்றும் கூறுவதுண்டு. உயிர்மங்களுக்கு ஏற்படும் சேதத்தை நிறைவு செய்வதும் உடலினுள் புகும் நோய் நுண்ணுயிரிகளைத் தாக்கி உடலை நோயினின்றும் பாதுகாப்பதும் இவற்றின் வேலைகளாகும்.

உங்கள் விரலில் காயம் பட்டால் என்ன ஆகின்றது? முதலில் வெட்டுப்பட்ட இடத்திலிருந்து குருதி வெளியேறும். பிறகு சிதைவு ஏற்பட்ட இடத்தில் குருதி வெள்ளணுக்கள் ஒன்று கூடும். வெட்டப் பட்ட இடத்திற்கு வரும் நோய் நுண்ணுயிரிகளை வெள்ளணுக்கள் தடுத்து நிறுத்தும். வெளிவந்த குருதியின் மீது காற்று படும்போது குருதியிலுள்ள நிணநீரகம் (Fibrinogen) மிக மெல்லிய இழைகளான உறை நிணநீராக (Fibrin) மாறுகின்றது. இவ்விழைகள் குருதி யணுக்களைத் தடுத்து நிறுத்தி குருதியை உறையச் செய்து குருதி வடிதலை நிறுத்துகின்றது. உறைந்த குருதி இறுகிப் பொருக்காக (Scab) மாறி வெட்டப்பட்ட இடம் ஆறும்வரை தங்கி இருக்கின்றது. பிறகு அது தானகவே உதிர்ந்துவிடுகின்றது.

குருதி எவ்வாறு உயிர்மங்களுக்குத் தேவையான உணவைக் கொடுக்கின்றது? உயிர்மங்களுக்குச் செல்லும் நுண்புழைக் குழாய்கள் உயிர்மங்களுக்குள் செல்வதற்கு இசைவளிக்கப்படுவதில்லை. உயிர் அணுக்களற்ற குருதியும் சில வெள்ளணுக்களும் சேர்ந்த பாய்மம் உயிர்மங்களைச் சூழ்கின்றது. இதற்கு நிணநீர் என்கிறோம். குருதியிலிருந்து நிணநீரின் வழியாக உணவும் தீயகமும் உயிர்மங்களுக்குச் செல்லுகின்றன. அங்கிருந்து கரி-இரு-தீயதையும் கழிவுப் பொருள்களும் நிணநீரின் வழியாகக் குருதியை அடைகின்றன.

உறங்கிக்கொண்டிருக்கும்போது நம்மை நம் பெற்றோர்கள் எழுப்பிக் கடமைகளைச் செய்யுமாறு பணிக்கின்றனர். இதேபோல் நம் உடலிலுள்ள குருதி, நாளமில்லா ஊற்றுநீரை (Hormone) எடுத்துச் செல்லுகின்றது. இந்நீர் உயிர்மங்களை ஊக்குவித்து அவற்றைச் சரியாக வேலைசெய்யத் தூண்டுகின்றது. நம் தசைகளும் கல்லீரலும் உடலுக்கு வேண்டிய வெப்பத்தை உண்டாக்குகின்றன. குருதி இவ் வெப்பத்தை உடலின் எல்லாப் பாகங்களுக்கும் சீராக அனுப்பி, நம் உடலின் வெப்ப நிலையை ஒரே சீராக வைக்கின்றது. O

உங்களுக்குத் தெரியுமா?

–அறிவன்பு மலர்.

1. சீவக சிந்தாமணிச் சுருக்கம் பாடியவர்

2. உலகில் நீளமான ஆறு.

3. 'ஆசியா'–இதன் பொருள் என்ன?

4. மூவகை நூல்கள் யாவை?

5 பதப்பர் என்றால் என்ன?

6. கொய்யாக்கனி எந்நாட்டுக்கனி?

7. ஆங்கிலம் இந்தியாவில் எப்போது கல்விமொழி ஆனது?

8. திராவிட மொழிகளின் தூய்மை நிலையை வரிசைப்படுத்து.

9. மதுரைக் காஞ்சி பாடியவர் யார்?

10. 'வெள்ளொக்கலர்' என்பதன் பொருள் யாது?

விடை: 1. பகழிக்கூத்தர். 2. ஆப்பிரிக்காவின் வட பகுதியில் பாயும் நைல்; நீளம் 4145 கல். 3. எழு ஞாயிறு; அசு என்னும் அசிரியச் சொல்லிலிருந்து தோன்றியது. ஆசியா. 4. முதல், வழி, சார்பு. 5. வெள்ளத்தைத் தடுக்க இடும் மணற்கோட்டை; 'பலசூழ் பதப்பர் பரிய'-பதிற்றுப்பத்து. 6. பிரேசில்நாடு.

7. 1835-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஏழாம் நாள்.

8. தமிழ், மலையாளம், கன்னடம், துளுவம், குடகம், தெலுங்கு.

9. மாங்குடி மருதனார்.

10. குற்றமற்ற மரபினர்.

உலகிலேயே........!

0 மிக மெதுவாகச் செல்லும் புகைவண்டி நம் நாட்டில் நேப்பாளத்தில் உள்ளது. விரைவு 5 கற்கள்.

0 மிக நீண்ட தாடி வைத்திருந்தவர் செருமனியைச் சார்ந்த 'ஓன்சு இசுடெயின் சர்' என்பவர். தாடியின் நீளம் 5 அடி 3 விரற்கிடைகள். இவர் 1967-இல் இறந்து விட்டார்.

0 மிக நீண்ட நாட்கள் படுக்கையிலிருந்த நோயாளி 'பிளாரன்சு நைட்டிங்கேல்' அம்மையார். நெஞ்சாங்குலை கெட்டு விட்டதால் 1857-ஆம் ஆண்டு முதல் 1910-ஆம் ஆண்டு இறக்கும் வரையில் (அதாவது53 ஆண்டுகள்) மருத்துவமனையிலேயே இருந்தார்.

0 மிக நீண்ட நேரம் அறமன்றத்தில் வழக்குரைத்த வழக்கறிஞர் "உலூயி பெர்னுட்டு" என்பவர். பிரான்சைச் சார்ந்த இவர் தொடர்ந்து 5 இரவுகள் 5 பகல்கள், அதாவது 120 மணி நேரங்கள் வழக்குரைத்துள்ளார்.

0 மிக நீண்ட பெயரை உடையவன் 1866.ஆம் ஆண்டு இறந்துபட்ட "விசுகான்சின்" என்ற நாட்டைச் சேர்ந்த செவ்விந்தியன் ஒருவன். அவன் பெயர் 170 எழுத்துக்களைக்கொண்டது.

0 மிக நீளமான மடல் (ஒரே முறையில்) எழுதியவர் "பார்பாரா புல்லக்கு" என்ற ஒரு பெண். இவள் எழுதிய காதல் மடலின் நீளம் 150 அடிகளாம்.

0 உலகிலேயே மண்ணுக்கு அடியில் மிக நீண்ட நாட்கள் உயிரோடு புதைந்து கிடந்தவன், "ஒகியோ" நாட்டான் ஒருவன். அவன் 6 அடி ஆழத்தில் 45 நாட்கள் புதையுண்டு கிடந்து, மீண்டும் உயிரோடு எழுந்தான்.

0 மிகுதியான குழந்தைகளைப் பெற்றவன் 'மௌலே இசுமாயில்' என்ற "மொரோக்கா" நாட்டரசன் ஒருவன். 1727-இல் இவன் இறக்கும் பொழுது இவனுக்கு 538 புதல்வரும், 340 புதல்வியரும் இருந்தனர்.

0 மிகுதியான குழந்தைகளைப் பெற்ற தாய் "பெர்னுட் செகின்" என்பவள். 'ஆசுத்திரிய' நாட்டவளான அவள் பெற்ற குழந்தைகளின் எண்ணிக்கை 69.

0 மிக நீண்ட நாட்டுப் பாடல் கொண்ட நாடு கிரேக்க நாடு. 158 அடிகள் கொண்டது அப்பாடல். குறுகிய நாட்டுப்பாடல் உடைய நாடு சப்பான். 4 அடிகளைக் கொண்டது சப்பானின் நாட்டுப் பாடல்.

0 மிகப் பெரிய மணியான "சார்மணி" உருசியாவில் "கிரெம்ளின்" மாளிகையில் உள்ளது. அதன் உயரம் 18 அடிகள். எடை 200 கல்லெடை.

–பெருங்காப்பியன்.

கலித்தொகை.

எட்டுத்தொகை நூல்களில் கலித்தொகை ஆறுவதாகும். 'கலி' என்னும் ஒருவகைப்பாடல்களின் தொகுதியாதலின், இப்பெயர்வந்தது.

கலிப்பா இசையோடு பாடுதற்கு ஏற்றது. பரிபாடலும் கலிப்பாவும் அகப்பொருட் செய்தியைப் பாடுவதற்கு இயைந்தவைகளாக இலக்கண ஆசிரியர்கள் குறித்துள்ளனர்.

கலித்தொகையில் அமைந்த பாடல்களின் தொகை நூற்றைம்பது. தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியரும், மற்றும் இறையனுர் அகப்பொருள் உரையாசிரியரும், 'சங்கத்தார் தொகுத்த கலிப்பாட்டு நூற்றைம்பது' எனக் கூறுவதால் இவ்வுண்மை விளங்கும்.

முதலிற் கடவுள் வாழ்த்தும், பின்னர் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் திணைகளுக்கு உரிய பாடல்களும் அமைந்துள்ளன. பாலைக்குரிய 35 பாடல்களைப் பாலைக்கலி எனவும், குறிஞ்சிக்கு உரிய 29 பாடல்களைக் குறிஞ்சிக்கலி எனவும், மருதத்துக்கு உரிய 35 பாடல்களை மருதக்கலி எனவும், முல்லைக்கு உரிய 17 பாடல்களை முல்லைக்கலி எனவும், நெய்தலுக்கு உரிய 33 பாடல்களை நெய்தற்கலி எனவும் பண்டையோர் வழங்கினர். இவற்றுள் மருதக்கலியை மருதப்பாட்டு எனவும், முல்லைக்கலியை முல்லைப்பாட்டு எனவும், குறிஞ்சிக்கலியைக்குறிஞ்சிப்பாட்டு எனவும் வழங்கியதும் உண்டென்பது பேராசிரியர் உரையால் புலனுகின்றது.

பாலைக்கலியைப் பாடியவர் பெருங்கடுங்கோன். குறிஞ்சிக்கலியை இயற்றியவர் கபிலர். மருதக்கலியை யாத்தவர் மருதன் இளநாகனுர்.

முல்லைக்கலியை அமைத்தவர் சோழன் நல்லுருத்திரனர். நெய்தற்கலியைச் செய்தவர் நல்லந்துவனர்.

கலித்தொகையைத் தொகுத்தவரும், தொகுப்பித்தவரும் யாவர் என்பது திட்டமாகத் தெரியவில்லை. இந்நூல் உரையாசிரியரான நச்சினர்க்கினியரின் குறிப்புப்படி, நெய்தற்கலியைச் செய்த நல்லந்துவனரே கடவுள்வாழ்த்துப் பாடலையும் இயற்றி இந்நூலைத் தொகுத்தார் என்று கொள்ள இடம் உண்டு.

ஒவ்வொரு பாடலின் கீழும், அப்பாடல் யார் சொல்லுவதாக அமைந்துள்ளது என்பதைப் பற்றிய குறிப்பு உண்டு. மேலும், தலைவன், தலைவி, தோழி போன்ருரது உரையாடலாக வரும் பாடல்களும் இந்நூலில் உண்டு.

நூல் முழுமைக்கும் நச்சினர்க்கினியரின் சிறந்த உரை அமைந்துள்ளது.

பிள்ளைகளே! உலகியலை ஒட்டிக் காதல் உண்மைகளை விளக்கும் இந்நூலைப் படித்து மகிழும் அளவிற்கு உங்கள் தமிழறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

கனவுகள்!

நாம் தூங்கும்போது நம்மில் சிலர் கனவு காண்கின்ருேம். அஃது ஏன் தெரியுமா? நாம் தூங்குகையில் எல்லா உறுப்புகளுமே நன்ருக ஓய்வு எடுத்துக்கொள்கின்றன. மூளை கூடத்தான். இரவு உணவு உண்கையில் மிகுதியாக வயிறு புடைக்கும்படி உண்டுவிட்டால், நமக்கு வேண்டா உணவையும், விரும்பா உணவையும் பிறர் வற்புறுத்தலுக்காக உண்டுவிட்டால்—அதன் காரணமாய் வயிற்று உறுப்புகளின் வேலையில் மாறுதல் ஏற்படுகின்றது. உறுப்புகள் குழப்பம் அடைகின்றன. இந்த மாற்றத்தாலும், குழப்பத்தாலும் மூளை விழித்துக்கொள்கிறது. இந்த விழிப்பும் சரியான விழிப்பன்று. விழித்துக்கொண்ட மூளை சும்மா இருக்குமா? அது தன் வேலையைக் காட்டத் தொடங்குகின்றது. முன்பு கண்ட பொருள்களை எல்லாம் நாம் எண்ணியபடி, பழைய புதிய எண்ணங்களைச் சேர்த்து ஒழுங்கின்றிக் காட்டுகின்றது. அதுதான் கனவு. எண்ணங்களின் மறுபதிப்புத்தான் கனவு எனப்படுகிறது.

—பெருங்காப்பியன்.

வியப்பான நிலைத்திணைகள்!

நிலைத்திணைகளும் நம்மைப் போலவே செயல் செய்கின்றன. கண்களில்லாமல் பார்க்கின்றன; செவிகளில்லாமல் கேட்கின்றன; நாவில்லாமல் சுவைக்கின்றன. அவற்றிற்கு நாடித்துடிப்பும் உண்டு. நம் குருதியில் கலந்துள்ள 'Haromone' என்ற பொருளைச் சுரக்கும் உயிரணுக்களும், பால் சுரப்பிகளும் நிலைத்திணைகளுக்கும் அமைந்துள்ளன. மது உண்டால் மாந்தனைப்போல் அவையும் தம் நிலை இழக்கின்றன. பாம்பு கடித்தால் நிலைத்திணைகளும் இறந்துவிடுகின்றன. சில நிலைத்திணைகள் புலால் உண்கின்றன. நிலைத்திணைகளின் உயிரணுக்கள் வழியாக மின்சாரம் செல்கையில் இலைகள் சுருங்குகின்றன. சில செடிகள் பெண்களைப்போல் நாணுந்தன்மை கொண்டுள்ளன. சில நிலைத்திணைகள் மாந்தர்களையும் உண்கின்றனவாம்.

–பெருங்காப்பியன்.

உப்புச் செய்தி!

0 உலகம் முழுமையிலும் உப்பு 1400 வகைப்பட்ட பல்வேறு தொழில்களுக்குப் பயன்படுகிறது.

0 2,00,00,000 கல்லெடை அளவுள்ள உப்பு இந்த உலகிற்கு ஓர் ஆண்டுக்குத் தேவை.

0 ஒரு குடுவை (காலன்) கடல்நீரில் ஏறத்தாழ கால் வீசம் கல்லெடை எடையுள்ள உப்பு இருக்கின்றதாம்.

0 ஒரு கனகல் (கியூபிக்மைல்) அளவுள்ள கடல் நீரினின்றும் 13 கோடி கல்லெடை எடையுள்ள உப்பு எடுக்கலாமாம்.

0 உலகில் உள்ள கடல் நீரை யெல்லாம் வற்றச் செய்தால், 4,41,93,000 கனகல் உப்பு கிடைக்குமாம்.

0 'கரிபியன்' கடலிலும், 'நடுத்தரைக் கடலி'லும் உப்பு மிகுதியான அளவு நீரில் கரைந்துள்ளது.

0 ஆடு, மாடுகளுக்குக் கழுநீரில் உப்பைக் கரைத்துக் கொடுத்தால் பால் மிகுதியாய்க் கறக்குமாம்.

நாடகம்பற்றிப் பாரதி!

"பாரதியார் ஒருநாடகம் பார்க்கச் சென்றிருந்தார். நாடகம் நிகழ்ந்தது. நாடகத்தில் வரும் மன்னன் நஞ்சைக் குடித்து மயங்கி உயிர்த்துயரம் அடையும் நேரம். ஆனால், மன்னனாக வந்த நடிகன் 'என்றனுக்கோ ஒருவகை மயக்கந்தானே! வருகுதையோ' என்று பாடலானான், உடனே பாரதி அங்கே எழுந்து "வசங்கெட்ட வனுக்குப் பாட்டு வேறா? மயக்கம் வந்தால் படுத்துக்கொள்ள வேண்டியதுதானே!" என்று கூவி உரைத்தார். உடனே சிரிப்பு அங்கிருந்தவர் வாய்வழியே வெடித்தது".

இவ்வுலக உருண்டை பற்றிய உண்மைகள்

0 உலகம் தோன்றி இருந்துவரும் காலம்–குறைந்தது 500 கோடி ஆண்டுகள்.

0	உலகின் மொத்தப் பரப்பளவு.	19,69,50,000	கற்பெருக்கம்.
0	நிலப்பகுதியின் பரப்பளவு.	5,75,10,000	,,
0	நீர்ப்பகுதியின் பரப்பளவு.	13,94,40,000	,,
0	நில நடுக்கோட்டில் உலகின் சுற்றளவு	24,90,2	கற்கள்
	தென்வடலாகச் சுற்றளவு.	24,860	,,

0 இவ்வுலகம் கதிரவனைச் சுற்ற எடுத்துக்கொள்ளும் விரைவு ஒருமணிக்கு 66,600 கற்கள்.

0 தன்னைத் தானே சுற்றிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் விரைவு ஒருமணிக்கு 1,000 கற்கள்!

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு, கொழும்பு
ஆண்டுக் கட்டணம் உருபா.	2-50	4-00
தனியிதழ் ,,	0-20	0-30

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

பூனை

தரங்கை–பன்னீர்ச்செல்வன்.

பஞ்சு மேனிப் பூனை!
    பாய்ந்தே உருட்டும் பானை!
மிஞ்சுங் கோரை மீசை!
    'மியாவ்' 'மியாவ்' ஓசை!

புலியைப் போலத் தாவிப்
    போக்கும் எலியின் ஆவி!
வலிமைக் காலின் உகிரும்,
    விரும்பி உடலை வகிரும்!

கண்கள் பளிங்குக் குண்டு.
    காது கிளிஞ்சில் துண்டு.
வண்ண உடல்மென் திண்டு!
    வளர்ந்த வால்பூச் செண்டு!

சின்னக் குட்டிகள் போடும்!
    சிரிக்க நம்மோ டாடும்!
இன்பப் பகலில் வாடும்;
    இருட்டில் இரையைத் தேடும்.

நாட்டின் உணவைக் காக்கவும்,
    நச்சு எலியைப் போக்கவும்,
வீட்டில் பூனை யொன்றினை
    வளர்த்தல் வேண்டும் என்றுமே!

---

0 'ஒலிப்பதிவு நாடாப் பொறி'யில் மிகச்சிறியது $4\frac{1}{2}$ விரற்கடை அகலம் $1\frac{1}{2}$ விரற்கடை பருமன் கொண்டது. 'அசுத்திரியா'வில் செய்யப்பட்டுள்ளது.

0 உலகில் ஒருமணி நேரத்தில் 36,00,00,000 வெண்சுருட்டுகள் புகைத்துக் கரியாக்கப்படுகின்றன.

0 இந்நாட்டின் பெரிய மாநிலம் நடுநாடு (உத்திரப் பிரதேசம்) அதில் மட்டும் பண்பட்டனவும், பண்படாதனவுமாக ஏறத்தாழ 142 மொழிகள் பேசும் மக்கள் உள்ளனர்.

கீழே 85 சொற்கள் சிதறிக் கிடக்கின்றன. அவை வெறுஞ் சொற்கள் அல்ல; சொல்முத்துகள். பத்துத் திருக்குறள் மாலையிலிருந்து அறுந்து விழுந்த சொற்கள் இவை. இவற்றைப்பொருள் பட மீண்டும் கோத்து அந்தப் பத்துக்குறள் மாலைகளையும் செவ்வையாய்க் கட்டுதல வேண்டும். எங்கே, உங்களால் முடிகிறதா பாருங்கள். சோம்பல்மட்டும் கூடாது. விடாமுயற்சி வேண்டும். ஒவ்வொரு சொல்லையும் கவனமாகப் படியுங்கள். அவற்றில் எவையாகிலும் சில சொற்கள் அறுந்து விழுந்த குறள் மாலையின் முதலில் உள்ள சொற்களாக இருக்கும். அவற்றை அடையாளம் கண்டுகொள்ளுங்கள். அவற்றின்பின் அவற்றுடன் கோக்கப்பட வேண்டிய சொற்களை வரிசையாகக் கண்டுபிடித்து விடுவீர்கள். பெரியோர்களை மட்டும் கேட்கவேண்டா. நீங்களே கண்டுபிடிப்பதுதான் நல்லது முயன்று பாருங்கள். மூளைப்பயிற்சிதானே!

குறிப்பு:- படும், மேல், யாது, கோல், ஆயவர், கண், தீமையும், விடல், எஃகு, ஊதியம், ஆடவர், காலமும், பேதையார், இல், அளவும், பொறை, தோற்றம், நாண், ஞாலம், அவனை, ஒன்று, பேணலர், என்ன, புரிந்த, கேண்மை, ஈட்டம், வேலி, நாடி, உணரா, செறுநர், என்பது, பிணி, வேண்டா, மன்னே, தோன்றின், ஏதம், கிளைஞரை, தன்மையால், பயத்தவோ, கூரியது, ஒரீஇ, செயல், இசை, கொள்ளாது, ஐயம், படும், என்பது, அளப்பது, ஆள, உறுப்பினுள், செருக்கு, விடல், கற்றான், இவறி, வியன், நலத்தின், கொண்டு, நீட்டி, நலம், உறுதி, கண், எனின், நன்மையும், ஆயின், பேதைமை, நார், ஓர், குறிப்பின், அதனில், ஒருவற்கு, செய்க, ஓர், போக, அளவும், நிலக்கு. பொருளை, கேட்டினும், அறுக்கும், உற்றான், கண், ஊதியம், குலத்தின், இன்மை, உண்டு, கருதி

(விடை அடுத்த இதழில்)

தெரிந்து கொள்ளுங்கள்

1 நாம் கைகளில் கட்டிக்கொள்ளும் கடிகாரங்களில் 150 முதல் 800 வரை உறுப்புக்கள் உள்ளன. இக் கைக்கடிகாரங்களில் பயன்படும் 'மயிரிழை விறைப்புக் கம்பி' தலை மயிரின் அரைப்பங்கு கனத்துக்கும் குறைவானது. கால் வீசம் கல்லெடை (பவுண்டு) எடையுள்ள எஃகு இரும்பிலிருந்து 20 கற்கள் நீளமுள்ள 'மயிரிழை விறைப்புக் கம்பி' தயாரிக்கலாம்.

2 அமெரிக்காவில் ஒவ்வொரு நாளும் 26 கோடி உருபா மதிப்புள்ள தாலர் தாள்கள் கொளுத்தப்படுகின்றன. அவை அழிவுற்றுப் பயன்படாதவை.

3 நம் நாட்டின் தலைநகரில் ஒவ்வொரு நாளும் 12,00,000 அஞ்சல்கள் அஞ்சற்பெட்டிகளிலிருந்து எடுக்கப்படுகின்றன.

4 அமெரிக்கா 50 இலக்க உருபா செலவில் செயற்கை நிலவு ஒன்றைச் செய்து அதை வானில் பறக்கவிடப் போகிறதாம். அதன் ஒளி 258 கற்பெருக்க அளவிற்குத் தெரியுமாம்.

5 உருபாத் தாள்கள் இப்பொழுது சிறிய அளவில் அச்சாகின்றன அல்லவா? அதனால் 300 கல்லெடை (Ton) காகிதமும், 30 இலக்க உருபாவும் மீதமாம்.

6 அமெரிக்காவில் ஏறத்தாழ 8,00,00,000 பெயர்கள் கண்ணாடி அணிந்துள்ளனர்.

7 1965-ஆம் ஆண்டில் மட்டும் அமெரிக்காவில் 4,60,000 'சிற்றியங்கிகள்' (CARS) திருடப்பட்டுள்ளன.

8 உலகில் உள்ள மொத்தக் கடல் நீரின் அளவு 30,00,00,000 'கனகல்' பரப்புள்ளது.

9 நம் நாட்டில் 'தும்பா' என்ற இடத்திலிருந்து இதுவரையில் 52 'ஏவுகணை'கள் (கூர்முனை விண்கலங்கள்-ராக்கெட்) விடப்பட்டுள்ளன.

10 இவ்வுலகில் புலால் உண்ணும் நிலைத்திணைகள் (தாவரங்கள்) 500 வகைகள் உள்ளன.

தொகுப்பு: பெருங்காப்பியன்.

பயன்மொழிகள்.

"எப்பொருளை யார் யார் கூறக் கேட்டாலும் அப்பொருளின் உண்மையைக் காண்பதே அறிவாகும்" —திருவள்ளுவர்.

"இஃது உங்கள் நெஞ்சிலிருக்கட்டும்; மாந்தன் பயனின்றி அழிதல் கூடாது" —மாக்சிம் கார்க்கி.

"அண்டைவீட்டு ஏழை பசியால் வருந்துவதைக் கண்டு, அவனை நோக்காது, பாலும் பழமும் தேனுங் கொண்டுபோய்த்தெய்வப்படிமங்களின் தலையில் பொழிவானின் வழிபாட்டைக் கடவுள் ஏற்றுக்கொள்வாரா? ஒருபோதும் ஏற்றுக் கொள்ளார்." —திரு. வி. க.

"எல்லோரையும் நேசி; சிலரை நம்பு; ஒருவருக்கும் கெடுதி செய்யாதே!" —செகப்பிரியர்.

"உள்ளொன்றும் புறமொன்றுமாயுள்ள நண்பர்களைக் காட்டிலும் வெளிப்படையாயுள்ள பகைவனே மேலானவன்" —நெப்போலியன்.

"தவறுகளைக் காத்துக்கொள்ளும் துணிவும் அவற்றை விரைந்து திருத்திக்கொள்வதற்கான துணிவுமே மிகவும் சிறந்த துணிவாகும்" — இசுடாலின்.

"உங்கள் உடலையும் அறிவையும் வலுக்குறைக்கும் எதனையும் நஞ்சென ஒதுக்குக" —விவேகானந்தர்

"நிறையப்படி! இல்லையேல் படிக்காமலேயே இருந்துவிடு! அரைகுறையாகமட்டும் படித்து நின்றுவிடாதே. மிகவும் ஏதமான செயல்" — அலெக்சாண்டர் போப்.

"இன்று உன்னால் முடிந்தமட்டும் செய். நாளை அதனினும் மிக நன்றாகச் செய்யும் ஆற்றல் பெறுவாய்" —நியூட்டன்.

"உனக்காகப் போரிடுவது இயற்கையானது; ஆனால் மற்றவர்களுக்காகப் போரிடுவது பாராட்டத்தக்கது; ஆனால் மக்கள் இனம் முழுவதற்குமாகப் போராடுவது மிக மிகச் சிறந்தது." — இங்கர்சால்.

"எத்தகைய ஈகத்துக்கும் நான் அணியமாகி வருகிறேன். அத்தகைய ஈகம் தகுதியானது என்றும் கருதுகிறேன். என் குழந்தைகளைப் பற்றி மட்டும் நான் கவலைப்படவில்லை. குமுகாயத்திற்காகவும், உலகிற்காகவும் கவலைப் படுகிறேன்; எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பது பெரிதன்று; எந்த நோக்கத்திற்காக வாழ்ந்தோம் என்பதே சிறந்தது" —மார்ட்டின் லூதர்கிங்.

"நல்லதொரு கொள்கைக்காக வாழ்ந்து, இளமையில் மாண்ட போதிலும், எண்பது ஆண்டுவரை வாழ்ந்தவரைவிட அவர் உலகிற்கு மிகவும் உதவியாகலாம். சாவு அவர் கொள்கையை அழித்துவிடாது" —திருவாட்டி, கிங்.

தொகுப்பு: க. பன்னீர்ச்செல்வம், பம்பாய்-௯௭.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.